**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 Preliminary EXAMINATION 2017**

**H2 Tamil Language and Literature** **9567/2**
**Paper 2** 1hr. only

**E- Exam** **Date : 14-09-2017**

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைநன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின் படி வினாக்களுக்கு உரிய விடையைக் கணினியில் தட்டச்சுச்செய்யவேண்டும்.

2. விடையைத் தட்டச்சுச்செய்யும் முன் வினா எண்ணை மறக்காமல் குறிப்பிடுக.

This document consists of **printed 6 pages**

[Turn over]

**சுயவிடைக்கருத்தறிதல் (2)** **(30 மதிப்பெண்கள் )**

பின்வரும் இரண்டு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

**<u>பனுவல் ஒன்று:</u>**




## எழுத்தாளர் கபிலன்

| *என்னைப் பற்றி* | *என்னோடு தொடர்புக்கு* | *என் படைப்புகள்* | *என் நண்பர்கள்* |
|---|---|---|---|

ஆசை இல்லாதவர்கள் உலகில் இல்லை. ஆசைப்படுவது மனித இயல்பு தான். ஆனால் ஆசையைப்பற்றி விரிவாகச் சிந்தித்தால் அதைப்பற்றிய தெளிவு நம்மை அதன் தீமைகளில் இருந்து காப்பாற்றும். “ஆசை தான் துன்பத்திற்குக் காரணம்“ என்றார் புத்தர். ஆசை என்பது சிறுவயது முதற்கொண்டு அவரவருக்கு ஏற்ப விதவிதமாய் வளர்கிறது. இதில் சில இயற்கையானவைகளாகவும், சில ரசனை உணர்வால் தனிநபர் ஆசையாகவும் அமைகின்றன. இவ்வாசைகள் நிறைவேற சிலர் அல்லல்படுகின்றனர். சிலர் தியாகங்களைச் செய்கின்றனர்.

ஆசைகள் ஆரம்பத்தில் ஓர் எண்ணமாய்த் தோன்றும். அவற்றை ஆராயாமல் உணர்ச்சி வசப்படுவதன் காரணமாய்ப் படிப்படியாக மனத்தில் இடம் பிடித்துக்கொள்ளும். இது மனிதனை அடிமைப்படுத்தி அவனிடம் ஏக்கத்தை வளர்த்து அமைதியைக் கெடுக்கும்; இதற்காக தவறு செய்யக்கூடத் தூண்டும். இதற்கிடையே ஓர் ஆசை முடியும் முன் இன்னோர் ஆசையைக் கொண்டு வந்து நிறுத்தும்; ஆதலால் ஆசைக்கு எல்லையில்லை. சிலர் எதைப் பார்த்தாலும் அது தங்களிடம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால் அழகான ஒன்றை ரசிக்கும் போது அந்தப் பொருளுக்கும் நமக்கும் இடையே நாகரிகமான



**ஆவணங்கள்**

- 2015
- 2014
- 2013
- 2012
- 2011

தூரம் இருக்கிறது. ஆசை என்ற பெயரில் அதன் உரிமையாளனாய் இருக்க வேண்டும் என்று நினைக்கும் போது அந்தத் தூரத்தின் நாகரிகம் போய்விடுகிறது.

தர்மத்திற்கு விரோதமான ஆசைகள் சில உண்டு. மனிதன் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது இது போன்ற ஆசைகளில் தான். ஆசைகளுக்கு எல்லை வகுத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் அவை தர்மத்தின் எல்லைக்குள்ளே இருக்க வேண்டும் என்பதாகும். பலருக்குத் தேவைக்கும் ஆசைக்கும் வித்தியாசம் புரிவதில்லை. தேவைகள் ஆசையாக மாறலாம், ஆனால் ஆசைகள் தேவைகளாக மாறக்கூடாது. அப்போது தான் ஆசைகளினால் பாதிப்பு ஏற்படுகின்றது. தேவைகள் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். மற்றவர்கள் ஒன்றை வைத்திருக்கிறார்களே என்று நினைத்து நாமும் அதேபோல் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவது ஒருவிதமான தொற்று ஆசையாகும். தன்னல ஆசைகளைத் துறந்து பொதுநல ஆசைகளை வளர்க்க வேண்டிய நாம், ஆசைகள் அளவுக்கு மீறி வெறியாக மாறி விட்டன. உலகம் இன்று ஆசையின் உச்சத்திற்கே சென்று விட்டது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை கொண்டோர் அதிகரித்து வருகின்றனர். மனித ஆசைகள் இறக்கைக்கட்டிப்பறக்கின்றன. அதனால் மனிதன் மனிதனாக இல்லை. மனிதன் மாறி விட்டான் மரத்தில் ஏறி விட்டான்.

**Go to next page**




# பனுவல் இரண்டு- கருத்துக்களம்

**எழுத்தாளர் : முகிலன்**

| என்னை அறிக | என்னோடு உரையாட | என் படைப்புகள் | என் நண்பர்கள் |
|---|---|---|---|

நல்லது நண்பரே! நீங்கள் கூறுவதைப்பாரத்தால் ஆசைகளே மனதில் இருக்கக்கூடாதா?.ஆனால் நான் கருத்தில் மாறுபடுகின்றேன். மனிதன் ஆசைப்படவேண்டும். ஆசைப்பட வேண்டும் என்பது தான் பலரின் கருத்து. ஆசைகளை மனத்தராசில் நிறுத்துப் பார்த்துத் தான் மனதில் அனுமதிக்க வேண்டும். மன அடக்கத்தைக் கையாண்டு அவர்களின் நிலைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, தர்மத்தை மீறாத வகையில் ஆசைகள் அமைந்து பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆசைகள் சில நிறைவேறும்; சில நிறாசைகளாகப் போகும். அந்த நிறாசைகளையே நினைத்துக் கொண்டிருந்தால் மன உளைச்சல் தான் அதிகரிக்கும். ஆசையைப் பற்றிய ஓர் உண்மை என்னவென்றால் அதுவும் மாறும் இயல்புடையது, அதன் மறுபக்கத்தில் துன்பம் உள்ளது; அது ஒரு விலங்கைப் போன்றது. அனுபவ முதிர்ச்சியினால் தான் ஆசையைப் பற்றிய தெளிவு பெருகும், அப்போது ஆசைப்படும் பொருள் எல்லாம் நன்மையைச் செய்யும் என்று சொல்ல முடியாது.

அதே சமயத்தில் சில ஆசைகள் பாராட்டைப் பெறுவதோடு, பிறருக்கு நன்மையும் செய்கின்றன. ஒரு படைப்பாளி அல்லது சிந்தனையாளன் தங்கள் ரசனையால் சிலவற்றை உலகிற்கு அளித்து தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கின்றான். கல்வியிலும், அறிவிலும் ஆசைவைத்தால் அறிவாளிகள் உருவாகுவார்கள்.



**ஆவணங்கள்**

- 2017
- 2015
- 2014
- 2013
- 2012

ஆசைகளை மனிதன் எப்படிக் கையாள்கின்றான் என்பதில் தான் அவனது புத்திச்சாலித்தனம் இருக்கிறது. தன்னல ஆசைகளை விடப் பொதுநல ஆசைகளே உயர்ந்தவை. தன்னல ஆசைகளைத் துறந்து பொதுநல ஆசைகளை வளர்க்க வேண்டிய நாம், ஆசைகள் அளவுக்கு மீறி வெறியாக மாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒருமனிதன் பறவையைக்கண்டான் விமானம் படைத்தான். எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான். இதுவும் ஆசை தான் .இந்த ஆசை அறிவியல் வளர்ச்சியைத்தந்தது. இன்றைய தகவல் தொழில் நுட்பத்தின் பரிணாமவளர்ச்சியே மனித ஆசையால் தோன்றியவை, வளர்ந்தவை என்றால் மிகையாது. ஆறறிவு உடைய உயர்திணைகளாகிய நாம் மனத்தைச் சமநிலைக்குக் கொண்டுவந்து தியானம் செய்து நம் ஆசையை நல்லவைகளாக்கி வளர்ச்சியை நோக்கி, யாரும் வருந்தாவகையில் நல்வழியில் செலுத்துவோம்.

**அடுத்தபக்கம் பார்க்க- வினாக்கள் உள்ளன.**

**<u>வினாக்கள்</u>**

**Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று)**

**(4 மதிப்பெண்கள் )**

உலகம் இன்று ஆசையின் உச்சத்திற்கே சென்று மண்ணாசை பொன்னாசை கொண்டோர் அதிகரித்து வருக்கின்றனர்.

1. **இடவாகுப்பெயர்**
2. **உம்மைத்தொகை**

**வினாக்கள்:**

1. ஆசைக்கு வரம்பு கிடையாதா? ஏன் ? **(4 மதிப்பெண்கள்** )
2. ஆசைகளினாலும், தொற்றுநோய் போன்ற ஆசைகளினாலும் மனிதன் அடையும் அல்லல்களை விவரிக்க . **(6 மதிப்பெண்கள்** )
3. ஆசைகளின் வேறுபாடுகளை இப்பனுவல்களைக்கொண்டு ஆராய்ந்து , உனது கருத்துகளையும் சேர்த்து 140 சொற்களில் எழுதுக. பனுவல் ஒன்று இரண்டை உதவிக்குப் பயன்படுத்திக் கருத்துரைக்கலாம்.

**( 15 மதிப்பெண்கள் )**

# <u>முற்றும்</u>

============================================================